**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066943

1. District : கடலூர்    PS:    Year: 2019    FIR No.: 05/19    Date: 04.06.19
மாவட்டம்    காவல்நிலையம்    ஆண்டு    மு.த.அ. எண்    நாள்

2. (i) Act சட்டம்: குற்றவியல் நடைமுறைசட்டம் 1973    Sections பிரிவுகள்: 102.
(ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :    Date from : 31.12.18    Date to : 31.12.18
குற்ற நிகழ்வு நாள்    நாள் முதல் 17.30 hrs    நாள் வரை 23.45 hrs.
Time Period :    Time from :    Time to :
நேர அளவு    நேரம் முதல்    நேரம் வரை
(b) Information Received at PS. Date : 02.01.2019    Time : 10.00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    நேரம்
(c) General Diary Reference : Entry No(s) VOL I.    Time : 02.01.19, 10.00 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    நேரம்

4. Type of Information : Written/ Oral : கணினி தட்டச்சு
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சார்பதிவாளர் இணை II அலுவலகம், திருப்பாபுலியூர், கடலூர் சுமார் 3km, தெற்கு.
Beat Number :    (b) Address :
முறைக் காவல் எண்    முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S :    District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. ராஜன்    (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்    தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth :    (d) Nationality :    (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு    நாட்டினம்    வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue :    Place of Issue :
வழங்கப்பட்ட நாள்    வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : முதுநிலை வருவாய் ஆய்வாளர்,    (g) Address : கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர். மாவட்ட ஆட்சியரகம்.
தொழில்    முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
சித்ரா வயது 49
க/பெ குமார், உதவியாளர், சார்பதிவாளர் இணை II
அலுவலகம் கடலூர் ( I/c சார்பதிவாளர் இணை II )

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :

கடலூர் மாவட்டம், திருப்பாபுலியூர், கடலூர்–பண்ருட்டி சாலையில் உள்ள சார்பதிவாளர் இணை II அலுவலகத்தில் கடந்த 31.12.2018 ம்தேதி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளரான M. ராஜா என்பவருக்கு கிடைத்த தகவலின்படி அவருக்கு உதவியாக அவரது அழைப்பை ஏற்று காவல் ஆய்வாளராகிய நான் மற்றும் காவலர்களுடன் திடீர் ஆய்வு சோதனை 17.30 மணி முதல் 23.45 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இதுசம்மந்தமாக கடந்த 02.01.2019 ம்தேதி M.ராஜா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் அவர்களால் 31.12.2018 ம்தேதி மேற்கொண்ட தீடீர் ஆய்வு சோதனை சம்மந்தமாக நடவடிக்கைகோரி புகார் மனு நிலையத்தில் அளித்திருந்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் M.ராஜா, முதுநிலை வருவாய் ஆய்வாளர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், கடலூர் பெறுநர் : காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். நாள் : 02.01.2019, பொருள் திடீர் ஆய்வு சோதனை – கடலூர் மாவட்டம், கடலூர் சார்பதிவகம்

(புகாரின் தொடர்ச்சி இணைப்புதாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

தபால் மூலமாக அனுப்பப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

S. Mala 4/6/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. Mala
Rank: நிலை ......................No. எண் .........
காவல் ஆய்வாளர், ஊ. த. க. பிரிவு கடலூர்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

இணை II அலுவலகம்–கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ஒப்படைத்தல் – புகார் மனு – நடவடிக்கை எடுத்தல் – சம்மந்தமாக, கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளரான M.ராஜா ஆகிய நான் எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், கடலூர் சார்பதிவகம் இணை–II அலுவலகத்தில் கடலூரில் உள்ள ஆவண எழுத்தர்கள் இன்று 31.12.2018 கடலூர் சார்பதிவகம் இணை– II அலுவலக உதவியாளர் பொறுப்பு சார்பதிவாளர் திருமதி.சித்ரா என்பவரை சந்தித்து ஆவணங்கள் பதிவு செய்வதற்க்காகவும், திருமண பதிவிற்காகவும் மற்றும் இதர பதிவிற்காகவும் பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 16.00 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த ஆய்வாளர் S.மாலா அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி கடலூர் சார்பதிவகம் இணை–II அலுவலகத்திற்கு மாலை 17.30 மணிக்கு மேல் சென்றால் அங்கு ஆவண எழுத்தர்கள் கடலூர் சார்பதிவகம் இணை–II அலுவலகத்தில் கொடுக்க உள்ள பணத்தை ஆய்வு செய்து கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், ஆய்வாளர் மாலா மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை 17.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கடலூர், திருப்பாபுலியூரில், கடலூர் – பண்ருட்டி சாலையில் உள்ள கடலூர் சார்பதிவகம் இணை–II அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் கடலூர் சார்பதிவகம் இணை–II அலுவலகத்தை கண்காணித்து பின்னர் 17.30 மணிக்கு வடக்கு பார்த்து அமைந்து இருக்கும் கடலூர் சார்பதிவகம் இணை–II அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது என்னுடன் வந்த ஆய்வாளரையும் அவரது காவல் குழுவினரையும் கண்ட சிலர் பயந்து கொண்டு அலுவலகத்தை விட்டு ஓட தொடங்கினர். அப்போது ஆய்வாளர் அலுவலகத்தின் முகப்பு வாசல் கேட்டை மூடினார். அப்போது என்னுடன் வந்த ஆய்வாளர், அலுவலகத்தில் இருந்து பயந்து ஒடி வந்தவர்களை, அலுவலகத்தின் ஹாலில் உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், ஆய்வாளரும் மற்றும் இதர காவல் குழுவினரும் ஹாலில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த பெண்மணியிடம் என்னையும், ஆய்வாளரையும் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அவரை பற்றி விசாரித்த போது தன் பெயர் R.சித்ரா, வயது 49, க/பெ குமார், உதவியாளர், சார்பதிவகம் இணை–II, கடலூர் என்றும் தற்போது கடலூர் இணை–II சார்பதிவாளர் பணியிடம் காலியாக உள்ளது என்றும், மேற்படி பணியிடத்தை கூடுதல் பொறுப்பாக கடந்த ஆகஸ்ட்–2018 முதல் கவனித்து வருவதாக என்றும், முகவரி எண்.1, காமராஜ் நகர், மஞ்சக்குப்பம், கடலூர் என அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, உதவியாளர் திருமதி.சித்ரா அவர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும்

சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அலுவலகத்தில் இருந்த ஊழியர்கள் முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம்.பின்னர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 25 வரை) மற்றும் தனி நபர் பண இருப்பு பதிவேடு (பக்கம் 1 முதல் 68 வரை) ஆகிய ஆவணங்களை கைப்பற்றினேன். பின்னர் நான், ஆய்வாளர் மாலா, உதவியாளர் திருமதி.சித்ரா மற்றும் காவல் குழுவினருடன் அலுவலக ஹாலில் உதவியாளர் திருமதி.சித்ரா அமர்ந்திருந்த நாற்காலின் முன் போடப்பட்டிருந்த மேஜையின் மீது இருந்த பணப்பெட்டியை சோதனையிட்ட போது அதில் பணம் மற்றும் இரண்டு வரைவோலைகள் இருந்தன. மேற்படி பணத்தை எண்ணிப்பார்க்க (1) 2000 x 1 = 2000/- (2) 500 x 12 = 6,000/- (3) 200 x 5 = 1,000/-, (4) 100 x 21 = 2,100/- (5) 50 x 4 = 200/- (6) 20 x 1 = 20/-, (7) 10 x 2 = 20/- ஆக மொத்தம் ரூ.11,340/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ரா விவரம் கேட்க, இந்த பணம் 1) Account A ன்படி பதிவு கட்டணமாக வசூலிக்கப்பட்ட ரூ.1,540/–, 2) Section 41 ன்படி வசூலிக்கப்பட்ட ரூ.33/–, 3) தமிழ்நாடு திருமண பதிவு கட்டணமாக வசூலிக்கப்பட்ட ரூ.1,010/–, 4) Account D ன்படி பதிவு கட்டணமாக வசூலிக்கப்பட்ட ரூ.7,720/–, 5) SD வசூலிக்கப்பட்ட ரூ.270/–, 6) இந்து திருமண பதிவு கட்டணமாக வசூலிக்கப்பட்ட ரூ.185/–, 7) சிறப்பு திருமணம் பதிவு கட்டணமாக வசூலிக்கப்பட்ட ரூ.80/–, 8) CD வசூலிக்கப்பட்ட ரூ.500/– என கூறி மேற்படி தொகை தான் ரூ.11,338/– என தெரிவித்தார். அதற்குரிய கணிணி பிரிண்ட் அவுட் எடுத்து ஆஜர் செய்தார், எனவே அப்பணம் அரசு பணம் என்பதால் உதவியாளர் சித்ராவிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் மேற்படி வரைவோலை 1) வரைவோலை எண் 847601 , ரூ.13,750/– The Joint Registrar Cuddalore, 2) வரைவோலை எண் 847600 , ரூ.6,150/– The Joint Registrar Cuddalore என இருந்ததால், மேற்படி வரைவோலைகள் உதவியாளர் சித்ராவிடமே ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பணபெட்டிக்கு அருகில் இருந்த ஆவணங்களுக்கு இடையிலும், அடியிலும் பணம் இருந்தது. அதை எண்ணிப்பார்க்க (1) 2000 x 12 = 24,000/- (2) 500 x 27 = 13,500/- (3) 200 x 4 = 800/-, (4) 100 x 10 = 1000/- (5) 50 x 56 = 2800/- (ஆக மொத்தம் ரூ. 42,100/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ரா விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ. 42,100/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். மேலும் உதவியாளர் சித்ரா அமர்ந்திருந்த நாற்காலிக்கு அருகில் இருந்த பிளாஸ்டிக் குப்பை தொட்டியை சோதனையிட்ட போது சிறு சிறு துண்டு பேப்பரில் பெயர் எழுதப்பட்டு அருகே தொகை குறிக்கப்பட்டு, குறிக்கப்பட்ட தொகை அந்த பேப்பரில் சுருட்டப்பட்டு காணப்பட்ட விவரம் பின்வருமாறு (1) சேகர் ரூ.1,000/–(500x2), (2) செவ்வந்தி ரூ.500/–(100x5) (4836/2018, 8508283808), (3) செந்தில்குமார் ரூ.2,500/–(500 x 5), (4) களப்பணி ரூ.2,000/–, Power – 900/- மொத்தம் ரூ.2,900/– (2000 x1, 500 x 1,100 x 4) மற்றும் (5) ஒரு காக்கி நிற கவரில் ஆனந்த் என பெயர்

எழுதப்பட்டு 2 x 3000 = 6,000, 1 x 500 = 500 (Declaration) , Fees 3 x 400 = 1,200/- மொத்தம் ரூ.7,700/–(2000x2, 500x5, 200x1, 100x6, 50x4, 20x10) ஆக மொத்தம் ரூ14,600/– இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ரா விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ14,600/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். மேலும் உதவியாளர் திருமதி.சித்ராவின் கைப்பையை சோதனையிட ரூ.200/– இருந்தது, அப்பணம் அவருடைய சொந்த பணம் என தெரிவித்தார், அதுசம்மந்தமாக அலுவலகத்தில் இருந்த தனிநபர் இருப்பு பதிவேட்டை பார்வையிட 31.12.2018 நாளிட்ட தேதியில் திருமதி.சித்ரா தனது கையிருப்பாக ரூ.200/– என தெரிவித்து இருந்தார். அதனால் திருமதி.சித்ராவிடம் மேற்படி ரூ.200/– தொகை ஒப்படைக்கப்பட்டது. பின்னர் உதவியாளர் திருமதி.சித்ராவின் இருக்கையின் இடதுபுறத்தில் வடக்கு பார்த்து போடப்பட்டிருந்த மேஜை நாற்காலில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் K.சதுஷ்னா, வயது 32, த/பெ கிருஷ்ணமூர்த்தி, தெய்வசிகாமணி நகர், கூத்தப்பாக்கம், கடலூர் என முகவரி சொல்லியும், தான் Camera operator ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். மேலும் அவரது டேபிள் டிராயரை சோதனையிட சோதனை செய்ய ஆவணங்களை தவிர பணம் எதுவும் இல்லை. மேற்படி Camera operator K.சதுஷ்னாவின் அருகில் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்த போது, மேற்படி பீரோவில் இருந்த ஆவணங்களுக்கு இடையில் பணம் இருந்தது. அதை எண்ணிப்பார்க்க (1) 500 x 3 = 1,500/- (2) 100 x 17 = 1700/- (3) 50 x 18 = 900/-, (4) 20 x 21= 420/-, (5) 10 x 40 = 400 ஆக மொத்தம் ரூ. 4,920/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ரா விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ. 4,920/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். மேற்படி Camera operator K.சதுஷ்னாவின் எதிரே போடப்பட்டிருந்த மேஜை நாற்காலியில் யாரும் அமரவில்லை, மேற்படி இருக்கை யாருடையது என உதவியாளர் திருமதி.சித்ராவிடம் கேட்க, அவர் மேற்படி இருக்கை சார்பதிவாளர் இருக்கை, மேற்படி பணியிடம் காலியாக உள்ளது என்றார். மேற்படி இருக்கையின் அருகில் போடப்பட்டிருந்த மேஜையின் முன்பு வடக்குபார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் S.P.சண்முகராஜா, வயது 38, த/பெ பக்கிரிசாமி, வான்பாக்கம், நெல்லிக்குப்பம், கடலூர் தாலுக்கா என முகவரி சொல்லியும், தான் தகவல் தொகுப்பு பணியாளர் ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். மேலும் அவரது டேபிள் டிராயரை சோதனையிட சோதனை செய்ய ஆவணங்களை தவிர பணம் எதுவும் இல்லை. பின்னர் உதவியாளர் திருமதி.சித்ராவின் இருக்கையின் வலதுதுபுறத்தில் வடக்கு பார்த்து போடப்பட்டிருந்த மேஜை நாற்காலில் அமர்ந்திருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் V.கிறிஸ்துதாஸ், வயது 57, த/பெ வனத்துராஜ், 7, திருவள்ளுவர் நகர், நெல்லிக்குப்பம், கடலூர் தாலுக்கா என முகவரி சொல்லியும், தான் Assistant ஆக பணிபுரிவதாகவும் சொன்னார். தான் பொது தபால் போக்குவரத்து மற்றும் இதர அலுவலக கடித போக்குவரத்து பணியை செய்வதாகவும்

சொன்னார். மேற்படி உதவியாளர் கிறிஸ்துதாஸ்யின் மேல்சட்டையை சோதனையிட அதில் ரூ.800/– இருந்தது. அப்பணம் அவருடைய சொந்த பணம் என தெரிவித்தார், அதுசம்மந்தமாக அலுவலகத்தில் இருந்த தனிநபர் இருப்பு பதிவேட்டை பார்வையிட 31.12.2018 நாளிட்ட தேதியில் கிறிஸ்துதாஸ் தனது கையிருப்பாக ரூ.800/– என தெரிவித்து இருந்தார். அதனால் கிறிஸ்துதாஸ்யிடம் மேற்படி ரூ.800/– தொகை ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது டேபிள் டிராயரை சோதனையிட சோதனை செய்ய ஆவணங்களை தவிர பணம் எதுவும் இல்லை. பின்னர் மேற்படி உதவியாளர் திருமதி.சித்ராவின் இருக்கைக்கு எதிரே போடப்பட்டிருந்த மேஜையின் எதிரே போடப்பட்டிருந்த நாற்காலியில் தெற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை விசாரிக்க 'தனது பெயர் L.உத்தமன், வயது 55, த/பெ லஷ்மணன், 26/32,கேப்பர் மலை ரோடு, வசந்தராயன்பாளையம், கடலூர் தாலுக்கா என முகவரி சொல்லியும், தான் அலவலக உதவியாளராக பணிபுரிவதாக சொன்னார். தான் அரசு பணத்தை வசூல் செய்யும் பணியை செய்வதாகவும் சொன்னார். தான் சார்பதிவாளர் பொறுப்பு சொல்லும் அலுவலக பணியை செய்வதாகவும் சொன்னார். மேற்படி அலுவலக உதவியாளர் உத்தமனின் மேல்சட்டையை சோதனையிட அதில் ரூ.300/– இருந்தது. அப்பணம் அவருடைய சொந்த பணம் என தெரிவித்தார், அதுசம்மந்தமாக அலுவலகத்தில் இருந்த தனிநபர் இருப்பு பதிவேட்டை பார்வையிட 31.12.2018 நாளிட்ட தேதியில் உத்தமன், தனது கையிருப்பாக ரூ.300/– என தெரிவித்து இருந்தார். அதனால் உத்தமனிடம் மேற்படி ரூ.300/– தொகை ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது டேபிள் டிராயரை சோதனையிட சோதனை செய்ய ஆவணங்களை தவிர பணம் எதுவும் இல்லை. மேலும் ஹாலில் இருந்த (1) V.ஜானகிராமன், த/பெ விஜயகுமார், அரும்பார்த்தபுரம், புதுச்சேரி, (2) k.தமிழ்செல்வம், த/பெ கிருஷ்ணமூர்த்தி, திருப்பாதிரிபுலியூர், கடலூர், (3) S.பாரதி, த/பெ சம்பத், வெள்ளாழங்குப்பம், விழுப்புரம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரிக்க அடமான பத்திரம் சம்மந்தமாக விசாரிக்க வந்திருப்பதாக சொன்னார்கள். (4) K.பாலகப்பரமணியன், த/பெ கருணாகரன், திருப்பாதிரிபுலியூர், கடலூர், (5) பாலசந்திரன் த/பெ சீனுவாசன், ஆல்பேட்டை, கடலூர், (6) ஹாஜமொய்தீன் த/பெ முஸ்தபா கமால், கடலூர் முதுநகர், 7) விஜயகுமார் த/பெ வரதராஜீலு, 8) சுந்தரராஜன் த/பெ கணபதி, 9) ரமேஷ் த/பெ சுப்பரமணியன், விழமங்கலம் ஆகியோர்கமை தனித்தனியே விசாரிக்க பத்திர பதிவு , பத்திர காப்பி வாங்க, வந்துள்ளதாக விசாரணையின் போது சொன்னார்கள், இதைதவிர மேற்சொன்னவர்களின் உறவினர்கள் அலுவலகத்தின் வெளியே நிற்பதாக சொன்னார்கள். மேற்படி ஹாலிற்கு தெற்குபுறமாக இருந்த பதிவு வைப்பு அறைக்கு சென்று சோதனையிட அந்த அறை 15 x 9 அடி அளவு கொண்டதாக இருந்தது. அந்த அறையில் பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் மாத்திலான இரண்டு ரேக்குகளில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. முதல் ரேக்கை சோதனையிட அதில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு இடுக்குகளில் பணம் இருந்தது, அப்பணத்தை எண்ணிப்பார்க்க, (1) 2000 x 10 = 20,000/- (2) 500 x 27 = 13,500 (3) 200 x 5 = 1,000/-, (4) 100 x 35 = 3,500/- (5) 50 x 12 = 600/- ஆக மொத்தம் ரூ.38,600/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ராவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன்

மேற்படி பணம் ரூ.38,600/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். அதனை தொடர்ந்து இரண்டாவது ரேக்கை சோதனையிட அதில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களுக்கு இடுக்குகளில் பணம் இருந்தது, அப்பணத்தை எண்ணிப்பார்க்க, (1) 2000 x 2 = 4,000/- (2) 500 x 16 = 8,000/- (3) 200 x 2 = 400/-, (4) 100 x 17 = 1700/- (5) 50 x 12 = 600/- (6) 20 x 20 = 400/-, (7) 10 x 56 = 560/- ஆக மொத்தம் ரூ.15,660/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ராவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ.15,660/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். பின்னர் மேற்படி பதிவு வைப்பு அறையின் இணைப்பு அறையாக தெற்குபுறத்தில் உள்ள அறையில் சோதனையிட அவ்வறை சுமார் 40 x 12 அடி அளவு கொண்டதாக இருந்தது. அந்த அறையின் சுவற்றில் உள்ள சிமெண்டிலான சுவர் அலமாரியில் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. மேலும் அவ்வறையில் கிழக்குபுறம் மரத்திலான பீரோக்களும், மேற்குபுறம் இரும்பிலான பீரோக்களும் இருந்தன. மேற்படி அறையின் வடக்குபுறத்தில் உள்ள சிமெண்டிலான சுவர் அலமாரியில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனையிட ஆவணங்களுக்கு இடுக்குகளில் பணம் இருந்தது, அப்பணத்தை எண்ணிப்பார்க்க (1) 2000 x 1 = 2,000/- (2) 500 x 15 = 7,500/- (3) 200 x 1 = 200/-, (4) 100 x 18 = 1,800/- (5) 50 x 27 = 1,350/- (6) 20 x 32 = 640/-, (7) 10 x 30 = 300/- ஆக மொத்தம் ரூ.13,790/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ராவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ.13,790/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். பின்னர் அவ்வறையில் இருந்த கிழக்குபுறம் இரண்டாவதாக இருந்த மர பீரோவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனையிட ஆவணங்களுக்கு இடுக்குகளில் பணம் இருந்தது, அப்பணத்தை எண்ணிப்பார்க்க, (1) 2000 x 2 = 4000/- (2) 500 x 3 = 1,500/- (3) 100 x 15 = 1500/- (4) 50 x 20 = 1000/- (5) 20 x 5 = 100/-, (7) 10 x 8 = 80/- ஆக மொத்தம் ரூ. 8,180/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ராவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ. 8,180/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். அதன்பின்னர் அவ்வறையில் மேற்குபுறம் முதலாவதாக இருந்த இரும்பு பீரோவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனையிட ஆவணங்களுக்கு இடுக்குகளில் பணம் இருந்தது, அப்பணத்தை எண்ணிப்பார்க்க, (1) 2000 x 2 = 4000/- (2) 500 x 4 = 2000/- (3) 100 x 13 = 1300/- (4) 50 x 25 = 1250/- (5) 20 x 10 = 200/- (6) 10 x 30 = 300/- ஆக மொத்தம் ரூ. 9,050/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ராவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ. 9,050/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். மேலும் மூன்றாவதாக

இருந்த இரும்பு பீரோவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஆவணங்களை சோதனையிட ஆவணங்களுக்கு இடுக்குகளில் பணம் இருந்தது, அப்பணத்தை எண்ணிப்பார்க்க, (1) 2000 x 1 = 2000/- (2) 500 x 3 = 1500/- (3) 200 x 1 = 200/-, (4) 100 x 15 = 1500/- (5) 50 x 32 = 1600/- (6) 20 x 17 = 340/-, (7) 10 x25 = 250 /- ஆக மொத்தம் ரூ. 7,390/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ராவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ. 7,390/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். பின்னர் ஹாலின் நுழைவாயிலுக்கு நேர் எதிரே இருந்த அறைக்கு சென்று சோதனையிட அந்த அறையில் இரண்டு மேஜைகள் போடப்பட்டிருந்தன. மேற்படி முதல் மேஜையில் வடக்கு பார்த்து அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க, தனது பெயர் P.ஆறுமுகம், வயது 61, த/பெ பெரியநாயகம், 13,அமர்ந்தவாழியம்மன் கோயில் தெரு, திருப்பாதிரிபுலியூர், கடலூர் எனவும், தான் பதிவு பெற்ற ஆவண எழுத்தர் என்றும், சார் பதிவாளர் அலுவலகத்திற்கு தேவையான பணிகளை செய்வேன், இதற்கு எனக்கு தினந்தோறும் ரூ.100 சம்பளம் கொடுப்பார்கள் என தெரிவித்தார். இவரது வாக்குமூலம் என்னால் பதிவு செய்யப்பட்டது. இரண்டு மேஜையின் முன் வடக்கு பார்த்து போடப்பட்டிருந்த நாற்காலியில் யாரும் அமர்ந்திருக்கவில்லை. மேற்படி அறையின் வலதுபுற மூலையில் இருந்த இரும்பு பீரோவை சோதனையிட, அதில் ஆவணங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்து. மேற்படி ஆவணங்களுக்கு இடுக்குகளில் பணம் இருந்தது, அப்பணத்தை எண்ணிப்பார்க்க, (1) 2000 x 1 = 2000/- (2) 500 x 3 = 1,500/- (3) 200 x 1 = 200/-, (4) 100 x 12 = 1200/- (5) 50 x 40 = 2000/- (6) 20 x 18 = 360/-, (7) 10 x 32 = 320/- ஆக மொத்தம் ரூ. 7,580/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ராவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ. 7,580/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். பின்னர் மேற்படி அறையின் இடதுபுறம் இருந்த கணிணி அறையை சோதனையிட, அவ்வறையில் இரு கணிணிகளும், மெயின் சர்வர் மற்றும் கண்காணிப்பு கேமராவின் இணைப்பு கருவிகளும், மேலும் ஆவணங்களும் இருந்தன. மேற்படி ஆவணங்களுக்கு இடுக்குகளில் பணம் இருந்தது, அப்பணத்தை எண்ணிப்பார்க்க, (1) 2000 x 1 = 2000/- (2) 500 x 2 = 1000/- (3) 100 x 10 = 1000/- (4) 50 x 15 = 750/- (5) 20 x 25 = 500/-, (7) 10 x 17 = 170/- ஆக மொத்தம் ரூ. 5,420/– பணம் இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த உதவியாளர் திருமதி.சித்ராவிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார்கள். உடன் மேற்படி பணம் ரூ.5,420/– சம்மந்தமாக சரியான முகாந்திரம் இல்லாததால் கைப்பற்றினேன். மேலும் அலுவலகத்தில் சோதனையின் போது இருந்தவர்களான (1) சிவக்குமார், (2) ஆறுமுகம், (3) சண்முகராஜா, (4) சதுர்ஷனா ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி வாக்குமூலத்தில் அவர்களின் கையொப்பமும் பெற்றேன். மேற்கண்ட சோதனையின் போது மொத்தம் ரூ.1,67,290/–

கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 17.30 மணி முதல் இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,67,290/– உடன் திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றப்பட்ட (1) அரசு கட்டணமாக பெறப்பட்ட பணம் ரூ.11,338/– க்கான விவர பட்டியல், (2) கடலூர் இணை–II சார்பதிவாளர் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் ஊழியர்களுக்கான வருகைப்பதிவேடு, (3) கடலூர் இணை–II சார்பதிவாளர் அலுவலக தனிநபர் இருப்பு பதிவேடு, (4)அலுவலகத்தில் சோதனையின் போது இருந்தவர்களான i) சிவக்குமார், ii) ஆறுமுகம், iii) சண்முகராஜா, iv) சதுர்ஷனா ஆகியோர்களது வாக்குமூலம் ஆகியவைகளை இணைத்து திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் கைப்பற்றுதல் மகஜரை இன்று 02.01.2019ம் தேதி 10.00 மணிக்கு கொடுக்கிறேன். எனவே மேற்படி புகார் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (கையொப்பம்) (M.ராஜா).

மேற்சொன்ன புகார் மனுவை கடந்த 02.01.2019–ம்தேதி பெற்று, புகார் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் மீது வழக்கு பதிவு செய்யவேண்டியும், உரிய விசாரணை மேற்கொள்ளவும், உரிய அதிகார அமைப்பு பெற்ற அதிகாரியிடம் முன் அனுமதி பெறவேண்டி இயக்குனரகம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனடிப்படையில் இன்று 04.06.2019–ந்தேதி காலை சுமார் 11.00 மணிக்கு, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு, கடலூர் அலுவலகத்தில் S. மாலா, காவல் ஆய்வாளர் ஆகிய நான் நிலைய பணியில் இருந்தபோது, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு, இயக்குனரகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற குறிப்பாணையில் பார்வை 1ல் கண்ட SC.No.182/2019/REGN/CL, நாள்: 15.02.2019, பார்வை 2ல் கண்ட VC's U.O Note No,1064/VC-I/2019-1, Dt.12.03.2019 மற்றும் பார்வை 3 ல் கண்ட Proc.No.3959/V1/2019, dt. 09.04.2019 of the Inspector General of Registration(FAC),Chennai-28 ன்படி கொடுக்கப்பட்ட உத்திரவுபடி

மேற்சொன்ன புகாரின் அடிப்படையில் இன்று 04.06.2019 பகல் 12.00 மணியளவில் புகாரில் குற்றம்சாட்டப்பட்டுள்ள R.சித்ரா வயது 49, க/பெ குமார்,உதவியாளர், சார்பதிவகம் இணை II அலுவலகம் (கூடுதல் பொறுப்பு இணை II , சார்பதிவாளர்) என்பவர் மீது சட்டபிரிவு 102 குற்றவியல் நடைமுறை சட்டம் 1973–ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது. கடந்த 02.01.2019 தேதியிட்ட புகார் மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள R.சித்ரா வயது 49, க/பெ குமார்,உதவியாளர், சார்பதிவகம் இணை II அலுவலகம் (கூடுதல் பொறுப்பு இணை II சார்பதிவாளர்) என்பவர் சட்டபிரிவு 2(C) ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 ன்படி அரசு பணியாளர் ஆவார்.

இந்த முதல் தகவல் அறிக்கையுடன் (1) மேற்சொன்ன அசல் புகார் மனு 02.01.2019 என தேதியிட்டது (2) அசல் தீடீர் ஆய்வு மகசர் 31.12.2018 தேதியிட்டது, (3) மேற்சொன்ன திடீர் ஆய்வு சோதனையின்போது சார்பதிவகம் இணை II அலுவலகத்தில் இருந்த 1.சிவக்குமார், 2.ஆறுமுகம், 3.சண்முகராஜா, 4.சதுர்ஷனா ஆகியோர்களை விசாரணை செய்து மனுதாரரால்

31.12.2018 தேதியில் தனித்தனியே பதிவு செய்யப்பட்ட அசல் வாக்குமூலங்கள், (4) திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட ரொக்கபணம் ரூ.1,67,290/– ஐ கருவூலக அலுவலர், மாவட்ட கருவூலக அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர் அலுவலகத்தில் 02.01.2019 ம்தேதி ஒப்படைத்து பெறப்பட்ட ரசீதின் நகல், ஆகியவைகள் இத்துடன் நீதிமன்ற நடவடிக்கைக்காக வேண்டி தலைமை நீதிதுறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு வழக்குகள் கடலூர் அலுவலகத்தில் அனுப்பிவைக்கப்படுகிறது. இதர நகல்கள் இயக்குநர், ஊழல் தடுப்பு கண்காணிப்பு இயக்குனரகம், சென்னை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

S. Mala
04/06/19.
( S. மாலா )
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க. பிரிவு,
கடலூர்.